4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அறிவிப்புகள்.

(அ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.